ADCW

**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க அகில இந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி–I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாணவ/மாணவிகளுக்கு முதன்மைத்தேர்வு எழுத நிதியுதவி அளித்தல் – ரூ.10,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மாதிந–3.2)த் துறை

**அரசாணை (நிலை) எண்.42** **நாள்: 09.12.2016**

**துன்முகி, கார்த்திகை 24, திருவள்ளுவர் ஆண்டு, 2047**

படிக்க:

1. மானியக் கோரிக்கை எண் 52, 2016–17 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பு நாள் 10.08.2016.
2. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண் 4073/மாதிந 3.1/2016. நாள். 22.08.2016.

---

**ஆணை**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் 10.08.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

"அகில இந்திய குடிமை பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–I முதலான தேர்வுகளில் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெறும் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஊக்கத் தொகையாக ரூ.50,000/– வழங்கும் திட்டம்** செயல்படுத்தப்படும்".

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில், மாண்புமிகு சமூக நலம் (ம) சத்துணவு திட்டத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2016–17 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 50 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கும் பொருட்டு ரூ.50,000/– வீதம் மொத்த செலவினம் ரூ.25,00,000/–ஐ (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) புதிய கணக்கு தலைப்பின் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று முதற்கட்டமாக 2016–2017 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை ரூ.50,000/– வீதம் 20 பயனாளிகளுக்கு ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இத்திட்டத்தினை கீழ்காணும் விதிமுறைகளின்படி, செயல்படுத்துமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:-

தகுதி

இத்திட்டத்தில் பயனடைய கீழ்கண்ட தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும்:-

1. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகள் அல்லது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி–Iக்கான முதல் நிலைத் (Preliminary Examination) தேர்வில் தேர்ச்சி பெற்ற மாற்றுத்திறனாளி நபர்கள்.
2. மேற்குறித்த தேர்வுகளை எழுதுவதற்கான பதிவு பெற்ற பயிற்சி நிறுவனங்கள் ஏதேனும் ஒன்றில் பயிற்சி வகுப்பில் கற்பவராக இருக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் மாநில, மத்திய அரசு, மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.
4. இந்த நிதியுதவி ஒருவருக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

நிபந்தனைகள்

விடுவிக்கப்படும் தொகை புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை

தகுதியான மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆணையர் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நிதி விடுவிக்கப்படும்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன் 101–மாற்றுத் திறனாளிகள் நலன்–I-திட்டத்தில் சேராதது–BB-மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள்–12–படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்–09–ஏனையவை."
[த.தொ.கு.2235–02–101–BB-1209]

6. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதி 2016–2017ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு இறுதி திருத்த நிதிஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது. 2016–17ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதிஒதுக்கத்திற்கான கருத்துருவை நிதி(சந)த் துறைக்கு அனுப்பிடும்பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா. எண் 63010/ச.ந./16, நாள் 02.12.2016 பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதிபொதுக்கப் பேரேடு எண்.1492 (ஆயிரத்து நானூற்று தொண்ணூற்று இரண்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர்கள்
(மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

நகல்:

நிதி(சந/வ.செ.தி.பொது–II)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/12/16
பிரிவு அலுவலர்.